*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர் - **641 003***

*முனைவர். ஏ. சோமசுந்தரம்* Ph.D.,
*மக்கள் தொடர்பு அலுவலர்*
*கைப்பேசி: **94890 56730***

*தொலைபேசி: **0422 - 6611302***
*நிகரி: **0422 - 2431821***
*மின்னஞ்சல்:* pro@tnau.ac.in

---

*பெறுநர்,*
*ஆசிரியர்,*

*தேதி: **14-1-2019***

*ஐயா,*

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.*

## வேளாண் பல்கலைக்கழகத்தின் பொங்கல் பரிசாக புதிய இரகங்கள் வெளியீடு

தரமான விதையே உயர் விளைச்சலுக்கு ஆதாரம் என்பதால், ஆண்டுதோறும் விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு பயிர்களில் அதிக மகசூல் தரக்கூடிய புதிய இரகங்களை விவசாயப் பெருமக்களுக்கு பொங்கல் பரிசாக வெளியிட்டு வருகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினால் வெளியிடப்பட்ட பல்வேறு இரகங்கள் தமிழகம் மட்டுமல்லாது பல்வேறு மாநிலங்களில் உள்ள விவசாயிகளிடையே பிரபலமாக சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

இதேபோல, நடப்பு ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தினால் விவசாயிகளின் நலனுக்காக உருவாக்கப்பட்ட 14 புதிய பயிர் இரகங்களை வெளியிட மாநில பயிர் இரகங்கள் வெளியீட்டுக்குழு 07.01.2019 அன;று ஒப்புதல் அளித்துள்ளது. நெற்பயிரில் ஏடிடீ 53, விஜிடி 1, சாமை ஏடிஎல் 1, பாசிப்பயறு விபிஎன் 4, நிலக்கடலை பிஎஸ்ஆர் 2, ஆமணக்கு ஒய்.டி.பி.1, மரப்பயிரில் கடம்பு எம் டி பி 1, சுரைக்காய் பி எல் ஆர் 2, பூண்டு ஊட்டி–2, நட்சத்திர மல்லிகை கோ 1, உருளைக்கிழங்கு குப்ரி சஹ்யாத்ரி, வாழையில் காவிரி கல்கி, காவிரி சபா, காவிரி சுகந்தம் ஆகிய இரகங்கள் பொங்கல் பரிசாக விவசாயிகளின் நன்மைக்காக வெளியிடப்பட்டது. இரகங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

நெல் **ஏடிடீ 53: இந்த** இரகம் 105 நாட்கள் வயதுடையது. இது, குறுவை, கோடை, நவரை பருவங்களுக்கு உகந்தது. மேலும், சராசரி மகசூலாக எக்டருக்கு 6,340 கிலோ தரக்கூடியது. நடுத்தர சன்ன அரிசி, அதிக அரவைத்திறன் கொண்டது. குலைநோய், இலை உறை அழுகல், தண்டுதுளைப்பான் மற்றும் இலைமடக்குப்புழுவிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது.

**நெல் விஜிடி 1:** நடுத்தர உயரம், 130 நாட்கள் வயதுடைய சம்பா ரகம். சீரகச்சம்பா இரகத்தை போல் இந்த இரகத்தில் சமையல் பண்புகள் மற்றும் சுவைப் பண்புகள் இருக்கும். சாதம் மிருதுவாகவும், மிதமான வாசனையுடனும், உதிரியாகவும் இருக்கும். இது பிரியாணி மற்றும் குஸ்கா செய்ய உகந்தது. எக்டருக்கு 5,850 கிலோ விளைச்சல் தரக்கூடியது.

**சாமை ஏடிஎல் 1 :** தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், சேலம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சாகுபடி செய்ய ஏற்றது. வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது. அடர்த்தியான பெரிய கதிர்கள் மற்றும் எந்திரம் மூலம் அறுவடை செய்ய ஏற்றது; அதிக அரவைத் திறன் கொண்ட சத்தான தானியம். எக்டருக்கு மானாவாரியில் 1,590 கிலோ விளைச்சல் தரக்கூடியது.

**பாசிப்பயறு விபிஎன் 4:** நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் பயிரிட ஏற்றது. மஞ்சள் தேமல் மற்றும் சாம்பல் நோய்களுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. 65 முதல் 75 நாட்களில் எக்டருக்கு 1,025 கிலோ விளைச்சல் தரக்கூடியது.

**நிலக்கடலை பிஎஸ்ஆர் 2:** தமிழ் நாட்டில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படும் அனைத்து மாவட்டங்களிலும் மானாவாரி மற்றும் இறவையில் இந்த இரகத்தை பயிரிடலாம். வயது 110 நாட்களாகும். சராசரி மகசூலாக மானாவாரியில் எக்டருக்கு 2,220 கிலோவும் இறவையில் எக்டருக்கு 2360 கிலோவும் தரக்கூடியது. இது கொத்து வகையை சார்ந்தது, சுமார் 70.2 விழுக்காடு பருப்பு உடைப்புத்திறன் மற்றும் 46.51 விழுக்காடு எண்ணெய்ச் சத்து கொண்டது.

**ஆமணக்கு ஒய்.டி.பி.1:** தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஆமணக்கு ஒய்.டி.பி.1 இரகம் ஓராண்டு மற்றும் பல்லாண்டு பயிராக பயிரிட ஏற்றது. செடி ஒன்றுக்கு வருடத்திற்கு 3 கிலோ விதை மகசூல் கிடைக்கக்கூடியது, அதிக கிளைப்புத் தன்மை, பருத்த விதைகளை கொண்டது, வாடல் நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்டது. எக்டருக்கு 1,460 கிலோ விளைச்சல் தரக்கூடியது.

**சுரைக்காய் பி எல் ஆர் 2:** இந்த ரகம் ஒரு எக்டருக்கு 42 டன் மகசூல் தரக்கூடியது. நமது பாரம்பரிய குண்டு சுரை போலவும் அதே சமயத்தில் குறைந்த அளவு கழுத்தினையும் கொண்டுள்ளது. காய்கள் இளம் பச்சை நிறத்தில் 50 முதல் 55 நாட்களில் அறுவடைக்கு தயாராகும். இதனை பயிரிட பந்தல் அமைப்பு எதுவும் தேவையில்லை.

**பூண்டு ஊட்டி 2:** நீலகிரி, திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலைப்பகுதி மற்றும் ஈரோடு மாவட்டம் தாளவாடி மலைப்பிரதேசப் பகுதிகளுக்கு ஏற்றது. 123 நாட்களில் ஒரு எக்டருக்கு 17 டன்கள் விளைச்சல் தரக்கூடியது. குமிழ்கள் மிதமான முட்டை வடிவில் பளபளப்பு இளஞ்சிவப்பு நிறத்துடன் இருக்கும். அதிக அளவு அல்லிசின் (கிராம் ஒன்றுக்கு 3.87 மைக்ரோ கிராம்) கொண்டது.

**நட்சத்திர மல்லிகை கோ 1 :** வருடம் முழுவதும் பூக்கும் தன்மை கொண்டது. மற்ற மல்லிகை வகைகள் சந்தையில் கிடைக்காத பருவங்களில் (நவம்பர் – பிப்ரவரி) இந்த மலர்கள் கிடைக்கப்பெறும். அழகிய பெரிய மொட்டுகள் மிதமான நறுமணம் கொண்டவை. மலர் மொட்டுக்கள் அதிக நேரம் விரியாமல் இருக்கும் (அறை வெப்ப நிலையில் 12 மணி நேரம், குளிரூட்டப்பட்ட அறையில் 60 மணி நேரம்), நீண்ட மலர்காம்பு பறிப்பதற்கும் மலர்ச்சரம் தொடுப்பதற்கும் ஏற்றதாக உள்ளது.

**கடம்பு எம் டி பி 1:** தமிழ்நாடு முழுவதும் பயிரிட ஏற்றது. குறுகிய கால மரப்பயிர். மரக்கூழ் (44%) பயன்பாட்டிற்கு 3 வருடத்திலும், ஒட்டுப் பலகை மற்றும் தீக்குச்சி பயன்பாட்டிற்கு 5 வருடத்தில் பலன் தரும். எக்டருக்கு 135 முதல் 175 டன்கள் விளைச்சல் தரக்கூடியது.

**உருளைக்கிழங்கு குப்ரி சஹயாத்ரி:** இந்த இரகமானது வசந்த, கோடை மற்றும் கார்காலங்களில் நீலகிரி மலைப்பகுதியில் பயிரிட ஏற்றது. இலைக்கருகல் மற்றும் முட்டைக்கூட்டு நூற்புழுவிற்கு அதிக எதிர்ப்பு சக்தியைக் கொண்ட அதிக மகசூல் (எக்டருக்கு 28–35 டன்) தரும் புதிய ரகமாகும். கிழங்குகள் நல்ல சேமிப்புத் திறனையும் கொண்டவை.

வாழை **காவிரி கல்கி:** எக்டருக்கு 50–60 டன் விளைச்சல் தரக்கூடியது. குட்டையான இந்த இரகம் குறுகிய கால பயிராகும், கற்பூரவள்ளி ரகத்தை போன்றே அதிக அளவு இனிப்பு கொண்டது. வருடாந்திர பயிர் சாகுபடி மற்றும் அடர்நடவு முறைக்கும் ஏற்றது. மரத்தின் உயரம் குறைவாக இருப்பதால், குலை தள்ளும் பருவத்தில் முட்டு கொடுக்க வேண்டிய தேவையில்லை.

**காவிரி சபா :** குறுகிய கால பயிரான **காவிரி சபா** வாழை இரகத்தை கனியாகவும் சமையலுக்கும் பயன்படுத்தலாம். வாடல் நோயைத் தாங்கி, களர் உவர் மண் பகுதிகளிலும் வளரும் தன்மை கொண்டது. காய்கள் 7 முதல் 8 நாட்களுக்கு பசுமை மாறாமல் இருக்கும். எக்டருக்கு 58 முதல் 60 டன் விளைச்சல் தரக்கூடியது.

வாழை **காவிரி சுகந்தம்:** கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் குறிப்பாக நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை பகுதியில் பயிரிட உகந்தது. எக்டருக்கு 50 டன் விளைச்சல் தரக்கூடியது. காய்கள் அடர்பச்சை நிறத்துடனும், கனிகள் பசுமை கலந்த மஞ்சள் நிறத்துடனும் இருக்கும். கனிகள் வாசனையுடன் கூடிய இனிப்பு சுவையுடனும் இருக்கும். வாடல்நோய்க்கு எதிர்ப்பு திறன் கொண்டது.

*மக்கள் தொடர்பு அலுவலர்*